| | | |
|---|---|---|
| **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்**<br>**Provincial Department of Education – Northern Province** | | |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை 2023** | | |
| **தரம் :- 09** | **நாடகமும் அரங்கியலும்**<br>**I&11** | **நேரம் :- 2 மணித்தியாலங்கள்** |
| சுட்டெண்:............................... | | |

## பகுதி I

### பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01. ‘பாத்திரம்’ என்பதனால் கருதப்பெறுவது.
(1) உடனடியாக நிகழ்த்துதல் (2) தாங்கி நிற்றல்
(3) சித்திரிப்பு (4) உடல் உள வெளிப்பாடு.

02. பின்வருவனவற்றில் பாத்திரமொன்றின் சமூகவியற் பண்பாக அமைவது.
(1) வயது (2) நடத்தைகள் (3) விருப்பு வெறுப்புகள் (4) தொழில்

03. நாடக எழுத்துருவின் இன்றியமையாத கூறாகக் கருதப்படுவது.
(1) நடிகன் (2) காட்சி விதானிப்பு (3) மோதுகை (4) இசை.

04. நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு துணைக்கலைகளின் பயன்பாட்டை இனம் காண உதவுவன.
(1) மேடைக்குறிப்பு (2) சொல்லாடல்
(3) பாத்திரச் செயலியக்கம் (4) மேற்கூறிய யாவும்.

05. பின்வருவனவற்றுள் கூட்டாக விளையாடும் அரங்க விளையாட்டாக அமைவது.
(1) இறால்,நண்டு, மீன் (2) குருட்டாட்டோ (3) பஸ் (4) கண்ணாடி

06. ஒரு பாத்திரம் வெளிப்படுத்தி நிற்கும் உடற் தோற்றப்பாடாக கருத்தில் கொள்வது.
(1) ஊமம் (2) புதிதளித்தல் (3) மெய்நிலை (4) பாத்திர ஒன்றிப்பு

07. நாட்டிய சாஸ்திரத்தில் பாவத்தினை ரஸம் என குறிப்பிடுவது போது தொல்காப்பியத்தில்
(1) உணர்ச்சி (2) மெய்ப்பாடு (3) நடத்தைகள் (4) மோடி

08. பின்வருவனவற்றில் நாடகாசிரியர் கூறவிளையும் செய்தி பார்ப்போரை முழுமையாக சென்றடைவது.
(1) சொல்லாடல் (2) மோதுகை (3) மேடைக்குறிப்பு (4) கரு

09. பின்வருவனவற்றுள் சங்கிலி நாடகத்தில் எதிர் நிலைப்பாத்திரங்களாக அமைவது.

(1) சங்கிலி, அரசகேசரி  (2) சங்கிலி, இமையாணன்

(3) சங்கிலி, அப்பாமுதலி  (4) அப்பாமுதலி, இமையாணன்.

10. பின்வருவனவற்றுள் வரலாற்று நாடகமாக அமைவது.

(1) சங்காரம்  (2) சங்கிலி  (3) ஆரொடு நோகேன்  (4) உறவுகள்

11. யாழ்பாடிக்கு யாழ்ப்பாணம் எனும் இடத்தினைப் பரிசாக வழங்கிய மன்னன்.

(1) இராஜசிங்கன்  (2) பரமசிங்கன்  (3) வெடியரசன்  (4) வாலசிங்கன்.

12. பின்வருவனவற்றுள் நடிகரின் புறவாரியான நடிப்பிற்கு அழுத்தம் கொடுப்பது.

(1) நடிப்பு  (2) துணைக்கலைகள்  (3) ஒப்பனை  (4) சொல்லாடல்

13. “சங்கரன் கொடுத்த வாளும் வேலும் தண்டும் என்கையில் பாராய்” இங்கு குறிப்பிடப்படும் துணைக்கலையாக அமைவது.

(1) வேட உடை  (2) கைப்பொருட்கள்  (3) காட்சி அமைப்பு  (4) மேடைப்பொருள்.

14. பின்வருவனவற்றுள் வாழ்வியல் சடங்காக அமைவது.

(1) சூரன் போர்  (2) குளிர்த்தி  (3) மரணச்சடங்கு  (4) பாஸ்கா.

15. பேராசிரியர் சி. மௌகுருவினால் எழுதப்பட்ட நாடகமாகக் கொள்ளப்படுவது.

(1) சங்காரம்  (2) நட்பு  (3) எந்தையும் தாயும்  (4) புழுவாகி மரமாகி

16. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் பெரும்பாலும்.

(1) கவிதை நடையில் அமைந்திருக்கும்.

(2) குறியீட்டுத் தன்மையில் அமைந்திருக்கும்.

(3) கூத்துப்பாணியில் அமைந்திருக்கும்.

(4) யதார்த்தம் சார்ந்ததாக அமைந்திருக்கும்.

17. புதிதளித்தலுடன் தொடர்பற்ற திறனாக அமைவது.

(1) எதிர்மறைச் சிந்தனைத்திறன்  (2) கற்பனைத்திறன்

(3) படைப்பாக்கத்திறன்  (4) தொடர்பாடற்திறன்.

18. மெய்நிலைகளின் முறையான வெளிப்பாட்டிற்கு அவசியமான பயிற்சி

(1) புதிதளித்தல்  (2) உடற்பயிற்சி  (3) குரற்பயிற்சி  (4) தியானப்பயிற்சி

19. வரலாற்று நாடகங்களில் துணைக்கலைகள் எவ்வாறு அமைந்திருக்கும்.

(1) வாழ்வை ஒத்ததாக அமைந்திருக்கும்.

(2) குறியீடாக அமைந்திருக்கும்.

(3) பகட்டு ஆடம்பரம் நிறைந்த வேடஉடை ஒப்பனையைக் கொண்டிருக்கும்.

(4) ஆடல் பாடல்களைக் கொண்டதாக இருக்கும்.

20. 

மேலுள்ள படம் குறிப்பது.

(1) மரணச் சடங்கு (2) திருமணச்சடங்கு (3) சூரன் போர் (4) மானம்பூச்சடங்கு

## பகுதி II

### முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(1) சுருக்கமான விடை தருக.

1. தமிழரின் புராதன நாடக வடிவம் யாது?
2. "சடங்கிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றது" என முதலில் கூறியவர் யார்?
3. 'புதிதளித்தல்' என்றால் என்ன?
4. சுமூகம்சார் சடங்கு ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக.
5. பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய யதார்த்தநாடகம் ஒன்றினை தருக.?
6. 'பாவ' வெளிப்பாட்டின் பிரதான ஊடகம் எது?
7. உலக நாடகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
8. பரத முனிவர் குறிப்பிடும் ரஸங்கள் எத்தனை?
9. மாவை நித்தியானந்தன் எழுதிய சிறுவர் நாடகங்கள் 2 தருக ?
10. பாத்திரமொன்றின் உளவியற் பண்புகள் இரண்டு தருக. ?

(12 புள்ளிகள்)

(2)
1. வகிபாகம் என்றால் என்ன?
2. "வங்கி முகாமையாளர்" என்ற பாத்திரத்தினுள் காணப்படும் வகிபாகங்களை வரைபு ஒன்றில் வரைந்து காட்டுக.
3. வகிபாகத்திற்கேற்ப பாத்திரப் பண்புகள் வேறுபடுவதை விளக்குக.

(3 + 4 + 5 =12 புள்ளிகள்)

(3)
1. மோதுகை என்றால் என்ன?
2. மனித வாழ்க்கையில் மோதுகை ஏற்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக.?
3. நாடகத்தில் மோதுகையின் அவசியத்தை விளக்குக.?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(4) 1. நாடகத்திற்கு துணை செய்யும் துணைக் கலைகள் மூன்று தருக. ?
2. வரலாற்று நாடகத்திற்குரிய மேடைப்பொருட்களை பட்டியற்படுத்துக. ?
3. வரலாற்று நாடகக் காட்சியமைப்பின் பயன்பாட்டை விளக்குக. ?

(5) 'சங்கிலி' நாடக எழுத்துருவை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் தகவல்களை பூர்த்தி செய்க.

| | | |
|---|---|---|
| நாடகத்தை எழுதியவர் | | 1 புள்ளி |
| கரு | | 2 புள்ளி |
| விடயப்பொருள் | | 2 புள்ளி |
| பாத்திரங்கள் | | 2 புள்ளி |
| மோதுகை | | 2 புள்ளி |
| மோடி | | 1 புள்ளி |
| சொல்லாடலின் தன்மை | | 2 புள்ளி |

(12 புள்ளிகள்)

(6) 1. உமக்குத் தெரிந்த வரலாற்றுக் கதைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. வரலாற்றுக் கதையொன்றினை நாடக எழுத்துருவாக எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?
3. மேலே நீர் குறிப்பிட்ட வரலாற்றுக் கதையை நாடக எழுத்துருவாக எழுதுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(7) பின்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. பாத்திரச் சித்திரிப்பு
2. அரங்க விளையாட்டுக்கள்
3. சடங்கு
4. வேடஉடை (4 x 2 =12 புள்ளிகள்)